# சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

## சப்ரகமுவ மாகாண அரச சேவையின் விளையாட்டுத் துறையின் அதிகாரிகளின் முகாமைத்துவ உதவி - தொழில்நுட்ப பிரிவு 2 (MT 2-2025) சேவை தரத்தின் III தர விளையாட்டு அதிகாரி பதவிக்காக ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

சப்ரகமுவ மாகாண சபை விளையாட்டுத் திணைக்களத்தின் விளையாட்டு அதிகாரி III தர பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2026.02.12 ஆம் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 35 இற்கு மேற்படாத தகுதி பெற்ற சப்ரகமுவ மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சை 2026 பெப்ரவரி மாதத்தில் நடத்தப்படும்.

**01. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி :- 2026.02.12**

**02. வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 05**

**03. ஆட்சேர்ப்பு தகைமை :-**

3.1 கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை

(அ)

I. தாய்மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி), கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் அனைத்து பாடங்களுக்கும் சாதாரண சித்தி பெற்றிருத்தல். (பொது ஆங்கில மற்றும் சாதாரண பொதுப் பரீட்சை தவிர்த்து)

III. விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் போட்டியின் மாகாண மட்டத்தில் (மாவட்டங்கள் இடையே) நடத்தப்படும் போட்டிகளில் 1 அல்லது 2 ஆவது இடங்களை பெற்றிருத்தல் தேசிய விளையாட்டு விழாவில் 1,2 அல்லது 3ஆவது இடங்களை பெற்றிருத்தல், விளையாட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் தேசிய சம்பியன்சிப் போட்டிகளில் 1, 2 அல்லது 3 ஆவது இடத்தைப் பெற்றிருத்தல்.

(ஆ)

I. தாய் மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி), கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

II. தெற்காசிய போட்டி, ஆசிய போட்டி, பொது நலவாய போட்டி, உலக சம்பியன்சிப் போட்டி மற்றும் ஒலிம்பிக் போட்டிக்காக இலங்கையை பிரதிநிதித்துவம் செய்திருத்தல்.

04. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

05. இந்தப் பதவிக்கு தொடர்புடைய சம்பள அளவு:-

இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 அரச நிர்வாக சுற்றுநிருபத்திற்கு அமைய முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 2 (MT 2 – 2025) சம்பளப் பிரிவு MT 2 – 2025 என்பதோடு மாத சம்பள அளவு ரூபா 50,630-10x630-11x670-10x1010-10x1190 ரூபா 86,300 ஆகும். இது தவிர அரச அதிகாரிகளுக்கு அரசினால் அவ்வப்போது செலுத்தப்படும் வேறு கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

06. எழுத்துமூல சோதனை மற்றும் தொழில்முறை சோதனை நடத்தப்படுவதோடு அதன்மூலம் பெறும் பெறுபேற்றுக்கு அமைய விண்ணப்பதாரர் மூலம் பெறும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் அரச நிர்வாக சுற்றுநிருபம் 15/90 இன் ஏற்பாடுகளையும் பின்பற்றி திறமையை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு இணையானவர்கள் பணியமர்த்தப்படுவர். எழுத்து போட்டிப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் திறன் வரிசைக்கு அமைய, பணியமர்த்தப்படவுள்ள வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கினர் தொழில்முறை சோதனைக்காக அழைக்கப்படுவர். தொழில்முறை பரீட்சைக்காக அனுப்பிய விண்ணப்பதாரர்கள் அனைவரும் அடிப்படை தகைமைகளை சோதிப்பதற்கு சாதாரண நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர்.

07. இந்த ஆட்சேர்ப்பின் முழுமையான அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை www.sg.gov.lk மற்றும் www.psc.sg.gov.lk என்ற இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

**டபிள்யூ. ஆர். தினேஷா எஸ். ரத்நாயக்க**
**செயலாளர்**
**மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம்**
**சப்ரகமுவ மாகாணம்**
**2026.01.09**

tamilguru.lk